# விளம்பரம்™

**VLAMBARAM™**

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி 09 - பாலம் 04 FEBRUARY 15, 1999



**வீடு விற்பது, வாங்குவது**

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று.
எனவே இவை பற்றி பூரணமான இலவச
ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.
RE/MAX Crossroads Rlty Inc.

நம்பிக்கை ▲ நேர்மை ▲ திறமை



- மாரடைப்பை தடுக்க, மது அருந்தலாமா? (பக்கம் 2)
- "எயிட்ஸ்" இலிருந்து காப்பாற்ற (பக்கம் 10)
- நடுநிதியில் கார் பழக முடியுமா? (பக்.4)
- வெள்ளெழுத்து எப்படி ஏற்படுகிறது? (பக்கம் 5)
- புளூட்டோ ஒரு பனிமண்டலமான கோளா? (பக்கம் 6)
- 1998ல் அதி சிறந்த உதைபந்தாட்ட வீரர்....? (பக்கம் 8)
- இளைப்பாறிய காலத்தை சிறந்த முறையில் செலவழிக்க.... (பக்கம் 1)
- உடலா, உயிரா இன்பத்தை அனுபவிக்கிறது (பக்கம் 4)



**SABONA & Gift**

"முடி உதிரும் தொல்லை இனி இங்கு இல்லை"
எவமாரட்டின்" சகல கலைமகள்
புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

3238 Eglinton Ave. E. Scarborough, Ont. M1J 2H6
(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)


## உங்கள் சிறந்ததொரு ஓய்வுகால நாட்களை மேலும் சிறப்பிக்க சிலவழிமுறைகள்

1. சிறுதுளி பெருவெள்ளம் என்பதறகு இணங்க நீங்கள் $25 உங்கள் வருமானத்திலிருந்து ஒரு கிழமைக்கு ஒரு தடவை ஒதுக்கி அதை உங்கள் பிற்கால நல்வாழ்க்கைக்கு சேமிப்பீர்களாயின்,
1 மாதத்திற்கு 100 டொலர்களாகவும்,
1 வருடத்தின் பின் $1200.00 ஆகவும்,
10 வருடங்களின் பின் $12,000.00 உங்களுக்காக வட்டிமேல் வட்டியாக வளர்ந்து கொண்டிருப்பதை அவதானிப்பீர்கள் ஆயின் நீங்களே ஒரு வியப்புக்குள்ளாகி விடுவீர்கள்.

2. நீங்கள் ஒரு Loan ற்கு மாதாமாதம உதாரணமாக $300.00 செலுத்திக் கொண்டு வருவீர்கள் என வைத்துக் கொண்டால், நீங்கள் செய்ய வேண்டிய ஒரே ஒரு புத்திசாலித் தனம் என்னவெனில், அந்த Loan முற்றிலுமாக செலுத்தி முடிந்தவுடனும் நீங்கள் தொடர்ந்து அதே தொகையை உங்கள் R.R.S.P ற்குள் செலுத்துவதே ஆகும். நீங்கள் ஏற்கனவே த்தொகையை பழக்கப்பட்டு வந்ததனால் இது ரு ஏகபாரமாக இருக்காது. (தொடர்ச்சி 12ம் பக்)

## இந்த இதழின் சிந்தனைகள்

### கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

**கடமை** - இது ஒவ்வொருவரினதும் கடமை. தங்கள் கடமைகளை எவர் ஒருவர் மீறுகிறாரோ அவரிற்கோ அவரைச் சார்ந்தவரிற்கோ தீங்கிழைத்தவர் ஆவார். பிரதம மந்திரியாக இருந்து தனது கடமையை சரிவரச் செய்யாதவரால் நாட்டிற்கே அவமானம். ஆசிரியர் தமது கடமையில், கணவன்/மனைவி தமது கடமையில் தவறினால் எல்லாம் பாழாகிவிடும். தங்கள் கடமையை தாங்களே செய்யப்பழகுதல் வேண்டும். இம்மூன்றெழுத்து ஞாபகத்தில் இருக்க வேண்டிய முத்தெழுத்து. திருவள்ளுவர் திருக்குறளில் கூறியதாவது

*"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்"*

இதன் விளக்கம் யாதெனில் "ஆகா! இவனைப் பிள்ளையாகப் பெற்றது இவன் தந்தை பெற்ற பெரும்பேறு" என்று ஒரு மகன் புகழப்படுவதுதான்,

அவன் தன்னுடைய தந்தைக்குச் செய்யக் கூடிய கைம்மாறு எனப்படும். *(தொடரும்)*

## உன்னை அறிந்தால்.......

பிறந்த மனிதன் இறப்பது உறுதி. பிறக்கப்போகும் திகதியை தெரியப்படுத்திய இறைவன் மறையப்போகும் நாளை மர்மமாகவும் மறைமுகமாகவும் வைத்ததன் விந்தைதான என்னவோ? விஞ்ஞான உலகின் மட்டற்ற வேகத்தால் இந்த நாளையும் அறிந்தால் கூட ஆச்சரியப்படத் தேவையில்லை. இது விஞ்ஞானத்தின் உச்சமாகக் கூட இருக்கலாம்? வாழ்க்கையில் எது முக்கியம் - அமைதி, நின்மதி, நிறைவு, மகிழ்வு, அன்பு... இவற்றைப் பெற நாங்கள், எம்மை வளப்படுத்தி, செம்மைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

வாழ்க்கையில் சிறப்புற, வெற்றிபெற, தன்னிகர் அடைய, தன்னிறைவு பெற....

பல விஞ்ஞான ரீதியாக நிறுவப்பட்ட தகவல்களும் பலருடயை வாழ்க்கை அனுபவங்கள், சேர்க்கப்பட்ட தொகுதியாகவே இது அமையக் கூடும்.

என்றும் நலமுடன் வாழ.... உன்னால் முடியும் தம்பி... உன்னை அறிந்தால் இந்த உலகத்தில போராடலாம்... வெற்றி பெறலாம்... துணிந்தவனிற்கு வெற்றி நிச்சயம்!




**SINGAPORE CELLULAR**

Bell Mobility

$50.+Tax per Month

CANTEL

மாலை 7 மணி தொடக்கம்
காலை 7 மணி மட்டும் இலவசம் (FREE)
வெள்ளி மாலை 7 மணி தொடக்கம்
திங்கள் காலை 7மணி மட்டும் இலவசம் (FREE)
175 min FREE (Month) Add. 20 cents only
Additional every Min. 20 சதம் மட்டுமே

Mobile Message, Call Forwarding FREE
Call Display, Call Waiting FREE, Per Second Billing
For more Information: சத்தி (416) 745-2378

Hotline: (416) 980-1234

**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா - கொழும்புச்
சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை ஆகிய
இடங்களுக்கு கடுகதியில் பணம்
அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

**சிவாகம கிரியா பீடம்**

☎: (416) 724-7480



திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.



# அறிவும் ஆக்கமும் (28)

- *விஜே குலத்துங்கம்*

சென்ற இதழில் பச்சை தேநீர் (Green Tea) புற்றுநோய், கொலஸ்ரோல் போன்றவற்றை கட்டுப்படுத்தும் என கூறியிருந்தேன். புற்றுநோயை கட்டுப்படுத்தக்கூடிய இன்னொரு பதார்த்தம் Redwine ஆகும். Red wine ஆனது பல வழிகளில் புற்றுநோயையும், மாரடைப்பையும் தடைசெய்ய உதவுகின்றது.

திராட்சைப் பழங்களின் தோல்களிலும், திராட்சையின் இலைகளிலும் காணப்படும் Resveratrol எனப்படும் பதார்த்தம், புற்று நோய் தோற்றுவிக்கப்படும் பொழுது உருவாகும் மூன்று வெவ்வேறு நிலைகளையும் (Stages) கட்டுப்படுத்துகின்றது. புற்றுநோய் உருவாகும் பொழுது முதலாவது நிலையில் சாதாரண ஆரோக்கியமான கலம் ஒன்று, Mutation எனப்படும் விகார நிலையை அடையும். இரண்டாவது நிலையில் இது விருத்தி அடைந்து புற்று நோய் கலமாகின்றது. மூன்றாவது நிலையில் இப்படியான புற்றுநோய் கலங்கள் ஒன்று சேர்ந்து ஒரு கட்டியை (Tumour) உருவாக்குகின்றது. Resveration ஆரம்ப விகாரமடையும் நிலையையும், பின்னர் அதன் வளர்ச்சியையும் கூட கட்டுப்படுத்துகின்றது. புற்றுநோய் வளர்ச்சியை ஊக்குவிக்கும் Cyclooxybgenase என்ற நொதியத்தையும், இந்த Resveratrol கட்டுப்படுத்துகின்றது. இக்கண்டுபிடிப்பு சிக்காகோவிலுள்ள University of Illinois ன் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, 1997 ஆண்டு ஜனவரியில் வெளிவந்த Science Journal ல் பிரசுரிக்கப்பட்டது.

Red wine ல் காணப்படும் வேறு Polyphenol களும் Cholesterol ஐ குறைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. Redwine நாள்தோறும் உணவுடன் அருந்தும் பிரெஞ்சுக் காரர்களுக்கும், இத்தாலியர்களுக்கும் இருதய நோய்கள் வருவது குறைவு என்பதும் காணக்கூடியதாக இருக்கின்றது. எதிர்கால ஆராய்ச்சிகள் இப்பதார்த்தங்களை பிரித்தெடுத்து விற்றமின் மாத்திரைகள் போன்று, நோயைத் தடுக்கும் மருந்தாக பாவிக்கும் முறைகளை நோக்கி இருக்கப்போகின்றது. Redwine மதுவகை என்று கருதப்படுவதால் மது அருந்தாதவர்களுக்கும், சில மத வழக்கப்படி மது அருந்துவது பாவம் எனக் கருதப்படுவதால் பிரித்தானிய விஞ்ஞானிகள் Cabernet Sauvignon என்ற wine ல் இருந்து மாத்திரைகளை - Red wine pill உருவாக்கியுள்ளார்கள். மது அருந்த விரும்பாதவர்கள் இந்த மாத்திரைகளை உட்கொள்ளலாம்.

அளவாக மது அருந்துவதும், மாரடைப்பு வராமல் தடுக்க உதவும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவில் உள்ள நியூ சவுத் வேல்ஸ் இலுள்ள University of Newcastle ல் உலக சுகாதார நிறுவனத் (WHO) திற்காக ஒரு பரிசோதனை செய்யப்படடது. இநதப பரிசோதனையில் மாரடைப்பு வந்த 11,500 பேரிலும், மாரடைப்பு வராத 6,000 பேரிலும் மதுபானத்தின் விளைவு பரிசோதிக்கப்பட்டது. இப்பரிசோதனை முடிவுகளின்படி ஒவ்வொரு நாளும் இரண்டு Drinks எடுப்பவர்களுக்கு ஆகக் குறைந்த மாரடைப்பு ஏற்படும் அபாயம் காணப்பட்டது. அதாவது மதுபானம் அருந்தாதவர்களைவிட மதுபானத்தை அளவாக அருந்துவோருக்கு மாரடைப்பு அபாயம் குறைவு எனக் காணப்பட்டது. அளவாக மது அருந்துவது என்பது ஒரு நாளைக்கு இரண்டு Drinks என்ற அளவாகும். ஒரு Drink எனப்படுவது 1 glass wine அல்லது 125 ml. அல்லது 1 beer அல்லது 500ml., விஸ்கி, பிரண்டி போன்றவை 40 ml ஆகும். குடிக்கும் மதுபானத்தின் விளைவு 24 மணித்தியாலங்களுக்கு உடலில் இருக்கும். அல்ககோல் இரத்தத்தை இளகச் செய்வதால் இரத்தக் கட்டிகள் - Blood Closts உருவாகாமல் தடுப்பதால் மாரடைப்பு அபாயம் குறையும். ஒரு நாளைத் தவிர்த்து மறுநாள் இரண்டு மடங்காக எடுக்க இயலாது. இரண்டு Drinks க்கு அதிகமாக எடுக்கும் பொழுது ஈரல் நோய், புற்றுநோய் என்பன ஏற்படும். இதைவிட Peripheral arterial disease (PAD) எனப்படும் இரத்த நாடிகள் தடிப்படையும் வியாதியையும் 32%த்தால் அல்கோல் குறைக்கும் எனக் காணப்பட்டுள்ளது. அத்துடன் good cholesterol எனப்படும் HDL ஐயும் அதிகரிக்கும் எனக் காணப்பட்டுள்ளது.

அல்கோல் பற்றிய கண்டுபிடிப்புகள், மக்களின் மனத்தில் சிலருக்கு சஞ்சலத்தையும், சிலருக்கு மகிழ்ச்சியையும் சிலருக்கு ஆச்சரியத்தையும் கேள்விக் குறியையும் தோற்றுவித்தது. இதனால் சென்ற வருட ஆரம்பத்தில் University of Toronto, Addiction Research Foundation, Ottawa -Carleton Regional Health Department, Ontario Ministry of Health, Ontario addiction Coordinating Group ஆகியவை ஒன்று சேர்ந்து பின்வரும் ஆறு அறிவுரைகளை கூறியுள்ளது.

* ஒரு நாளைக்கு இரண்டு Drinks க்கு மேல் குடிக்கக் கூடாது.
* ஆண்கள் கிழமைக்கு **14** drinks க்கு கூடாமலும், பெண்கள் **9** drinks க்கு கூடாமலும் பார்க்க வேண்டும்.
* மெதுவாக உட்கொள்ள வேண்டும் இரண்டு drinks க்கு இடையில் குறைந்தது 1 மணித்தியாலம் இருக்க வேண்டும். மதுபானத்துடன் உணவும் சேர்த்கொள்ளப்பட வேண்டும், போதை ஏறாதவாறு பார்க்க வேண்டும்.
* ஏற்கனவே மது அருந்தாதவர்கள் மது அருந்த பழக வேண்டாம். நல்ல உணவு, தேகாப்பியாசம், புகைத்தலை தடுத்தல் போன்ற வழிகளை பின்பற்றலாம்.
* நோய்தடுப்பு இரண்டு நாளைக்கு **1 drink** என்ற அளவில் கூட செயல்படுத்தப்படலாம். →

*மதுபானம் அருந்துவதால் பிரச்சினை, addiction ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள், மருத்துவர்களையும், ஆலோசகர்களையும் கலந்தாலோசிக்க வேண்டும்.


அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு என முன்னோர்கள் கூறியுள்ளார்கள். இருமலுக்கு குடிக்கு Syrup களில்கூட அல்ககோல் உண்டு. ஆனால் குறைவாக உண்டு. மனித இயல்பு, குடிக்கத் தொடங்கினால் அதற்கு ஓர் கரை கண்டுதான் நிறுத்துவது. அப்படிக் கட்டுப்படுத்த முடியாதவர்கள் மது அருந்தாமலே விடுவது நல்லது. Red wine ல் முன்னர் கூறப்பட்ட, நல்ல இயல்புகளும் அத்துடன் அல்ககோலும் சேர்ந்திருப்பதால், Beer, Whiskey Brandy ஆகியவற்றை தவிர்த்து Redwine ஐ அருந்துவது நல்லது. எல்லாவற்றிற்கும் மேலாக Red wine மாத்திரைகள் கனடாவிற்கு விற்பனைக்கு வந்தவுடன் அதை பாவிப்பது நல்லது. கத்தியை மரக்கறி வெட்டவும் பாவிக்கலாம், தீயவழிகளில் இன்னொருவரை காயம் விளைவிக்கவும் பாவிக்கலாம். என்வோ எதையும் நல்ல நோக்கத்திற்காக நல்ல வழியில் பாவித்தால் யாவர்க்கும் நல்லது.

********************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை *இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.*


புதிய நிர்வாகத்தின் கீழ்
**Markham / Sheppard** பகுதியில்
**NEW SPICELAND**
☎ : 292-0086

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 92



**இடமிருந்து - வலம்**

1. நோபல் பரிசுபெற்ற இவ் இந்திய விஞ்ஞானியின் பெயரில் அமெரிக்கா விண்வெளி அவதான நிலையம் ஒன்றை அனுப்ப உள்ளது.
4. புகழ்
5. இன்நாள் (வல-இட)
6. மேன்மை
7. காவல் மேடை
8. சீலை
12. பாட்டு (வல - இட)
13. மார்கழியில் அதிகாலையில் பாடப்படுவது

**மேலிருந்து கீழ்**

1. இசை
2. சீர்படுத்து
3. பெரிய கறுத்த எறும்பு
5. முடிவு (கீழ்-மேல்)
6. நிச்சயம்
9. விடியற்காலம்
10. நியாயம்
11. மறுமொழி (கீழ்-மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் February 27, 99க்கு முன்னர் கிடைக்க வேண்டும். Address: **P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| த | ன் | ன | ம் | பி | க் | கை | |
| ச | | | | ர | | ஈ | |
| ர | | | ம் | க | கா | | கை |
| த | ன | ம் | | லா | | | ன |
| ன் | | | ன் | த | டி | ண் | ப |
| | மா | த | வ | ன் | | | ப் |
| பா | ரி | | ற | | ணி | | ர் |
| சி | | ன் | ம | த் | ப | ர | சு |

**#91இல் வெற்றி பெற்றோர்**
1) Jegalatha Paranthaman, Scarboro
2) Yogeswary Balasingam, Scarboro


நியூ ஸ்பைஸ் லாண்ட்
5800 Sheppard Ave.
Unit#16 Scarborough, Ont.

அவித்து அரித்த மா **1lb .53¢ 40 lb** மேல் **Free Delivery**
கொத்து ரொட்டிக்குரிய ரொட்டி
**Patty - Rolls - Cutlets - Puddings**
இடியப்ப **Machine**
மின் தேங்காய் துருவி
✆ **(416) 288-8177**
**E.Mail luxmy@gloimpex.com**
**Special Discount for Take-out / Restaurant & Caterers**

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
**Motor shampoo**
**Interior shampoo**
**Exterior wash & waxing**






**Repairs**
**safety certification**
**overall maintenance**
**under coating &**
**Rust proofing**

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] **285-4998**

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** ( MIDLAND & LAWRENCE )

## Lease (வாகனகுத்தகை) முடியும் போது?




நாம் வாங்கும் வாகனக் கடன் எதிர்காலத்துல எப்படியான விளைவுகளை ஏற்படுத்தும் ?

நாம் வாகனங்களை வாங்கும் போது பல வழிகளின் அதை வாங்குகின்றாம். சிலர் முழுத்தொகையையும் காசாக செலுத்தி வாங்குகின்றனர். எனது அறிவுக்கு எட்டிய வரையில் அது புத்திசாலித்தனமான விடயமாக எனக்கு படவில்லை. ஏனெனில் தற்போது பல தயாரிப்பாளர்களும் நல்ல வட்டி வீதங்களை தங்கள் புதிய வாகனங்களுக்கு வழங்குகின்றனர். அப்படி இருக்கும் போது நமது பணத்தை நாம் வீட்டு மோட்கேஜ் கட்டலாம். அதன் மூலம் பலபல ஆயிரம் டொலர்களை சேமிக்க முடியும் அல்லது RRSP போன்றவற்றில் முதலீடு செய்யமுடியும். இதுபோன்று பல வழிகளில் நமது பணத்தை பலமடங்காக பெருக்க முடியும்.

அதைவிடுத்து நமது பணத்தை முழுவதையும் படுக்க வைத்தல் நல்ல முடிவல்ல. நாம் வாகனங்களை வாங்கும் போது கடன் வாங்குகின்றோம்.

அந்தக் கடனைக் கட்டி முடிக்கும் வரையிலும் நீங்கள் ஒரு வீட்டை வாங்கவோ அல்லது ஒரு வியாபாரக்கடனோ அல்லது தனிநபர் கடனோ எடுக்கும் போது உங்களுக்கு கடனைத் தரும் வங்கிகளுக்கு சிறிய யோசனையைக் கொடுக்கலாம். அதாவது இவர் ஏற்கனவே இவ்வளவு கடனுடன் இருக்கின்றார் இவரால் எல்லாக் கடனையும் கட்டமுடியுமா?

அதனால் நீங்கள் வீடு வாங்கும் எண்ணத்தில் இருந்தாலோ அல்லது ஏதும் தனியார் அல்லது வியாபாரக் கடன் எடுக்கும் எண்ணத்தில் இருந்தாலோ பலவற்றையும் யோசித்து செய்தல் நன்மை பயக்கும்.

உங்கள் கிரடிட்டில் எந்த பாதிப்பும் இல்லாமலே (அதாவது வீடு வாங்கலோ கடன்கள் எடுக்கவோ) எந்த பாதிப்பும் அல்லாமல் உங்களால் புதிய வாகனத்தை வாங்க முடியும். இந்த முறையில் நீங்கள் வாங்கும் போது நீங்கள் கடன் எடுக்கவோ அல்லது உங்கள் வீட்டுக்கு மோட்கேஜ் எடுக்கவோ எந்தப்பாதிப்பும் இல்லை. உங்கள் கிரடிட்டில் பாதிக்காது வாகனம் எடுக்க வேண்டுமா?

சோதீஸ் - வேலை: (416) 364-1116 அல்லது Cell (416) 704 -1179

*We are entering 8 th year service in Scarborough.*

**Better Work ...**
**Less Money**



**N.T.E Auto Inc.**
New Trade Engineering

We service
EUROPEAN , JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**


We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

**என். ரி. ஈ. ஓட்டோ இங்.**

**AUTO INC.**
New Trade Engineering


151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎(416) 750 - 1573
SIVABALAN




# AUTO THAVAS
ONT. INC.

**Quality Used & New Car Dealer**

**Since 1992**



**வாகனங்களை விற்கவும்**
**வாங்கவும் மற்றும் சகல**
**வாகனங்களுக்கான**
**பழைய, புதிய**
**உதிரிப்பாகங்கள்**
**பராமரிப்புத்**
**தேவைகளுக்கும்**
**நாடுகள்**
தவா (Thava)

**We Buy, Sell &Trade**
**Imported and**
**Domestic Cars**

**New & Used Parts**
**Including**
**Engine, Transmission &**
**All Electrical Parts**

*Your Friendly Automotive Dealer*

**Pl Call: Thava**

**Tel: (416) 439-8618**
**Res: (416) 438-4250**

2946 Eglinton Ave. East, Scarborough Ont, M1J 2E7

# ஆரோக்கிய வாழ்வு (27)



- *N.* செல்வசோதி

## உடல் நலமும் யோகப் பயிற்சியும்

உலகிலுள்ள எல்லா உயிரினங்களும் இன்பத்தையே விரும்புகின்றன. இதற்கு மனிதன் மட்டும் விதிவிலக்கல்ல. மனிதன் இன்பத்தை அடையப் பின்பற்றும் வழிகள் சரியல்ல. இங்கே தான் மனிதன் திசைமாறிப் போகின்றான்.

உயிரானது உடலின் வாயிலாக உலக இன்பத்தை அனுபவிக்கிறது. உடல் இல்லையேல் இன்பத்தை அனுபவிக்க முடியாது. நோயற்ற உடல் எப்போதும் இன்பம்தான். "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையமுடியும்". என்பதுபோல் நோயற்ற உடல் இருந்தால்தான் இன்பம் அனுபவிக்க முடியும். விஞ்ஞானம் வளர்ந்துள்ள இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் மனிதர்கள் எல்லோரும் எதோ ஒரு வகையில் நோயுள்ளவர்களாகத் தான் இருக்கின்றனர்.

ஒருவருக்கு நோய் வந்தால் மருந்தின் மூலம் தீர்க்கலாம். நிரந்தரமாக இல்லை திரும்பவும் வரலாம் அல்லது பக்க விளைவுடன் வேறு நோய்கள் தோன்றலாம். எந்த நோய் வந்தாலும் நோய்க்கான காரணம் நோயின் தன்மை நோய் தீர்க்கும் வழி என்பனவற்றைப் புரிந்து செயல்பட்டால் நோயை அடியோடு நீக்கலாம். ஆனால் நோயை வருமுன் காப்பதே மேல். இதுதான் நிலையான இன்பம். இந்த இன்பத்தை அடைய நம் முன்னோர் நமக்களித்த அருஞ் செல்வமான யோகாசனம் எவ்வளவு காலம் வாழ்வது என்பது முக்கியமன்று, வாழ்நாள் முழுவதும் நோயின்றி வாழ வேண்டும் என்பதுதான் முக்கியம்.

நோயற்ற, ஆரோக்கியமுள்ள உடல் உள்ளவர்களிடம் உயர்ந்த எண்ணங்களும் இலட்சியங்களும் தோன்றுகின்றன. அதை நிறைவேற்றக்கூடிய ஆற்றலும் பிறக்கிறது. நாம் வாழும் இடம் சூழ்நிலை, சுற்றுப்புறம், பழகும் நண்பர்களின் பழக்கவழக்கங்கள், உணவின் ஒழுங்கீனம் என்பனவற்றாலேயே பல வியாதிகள் நம்மை வந்தடைகின்றன. இவற்றிலிருந்து விடுபட நமக்கு வழி உண்டா? நிச்சயம் உண்டு. அவைதான் நம் முன்னோர் நமக்களித்த

1. உணவு முறை
2. யோகாசன பயிற்சி
3. நாடிசுத்தி (பிராணாயாமம்)
4. தியானம்

### உணவு முறை

1. விஷேட உணவு தேவையில்லை
2. சாதாரண ஆகாரத்தை சத்துக் குறையாமல் உண்ண வேண்டும்.
3. கண்ட வேளைகளில் சாப்பிடக் கூடாது.
4. மூன்று வேளை அளவோடு சாப்பிடுதல்
5. வாரம் ஒருநாள் விரதம் இருத்தல்

### யோகப் பயிற்சி

உணவு முறையை பின்பற்றிக் கொண்டு ஆசனப் பயிற்சி, நாடி சுத்தி, தியானம் என்பனவற்றை ஒழுங்காக தினமும் செய்து வந்தால் அற்புதமான பலன் கிடைக்கும்.

1) கூடுதலான பிராணவாயு நுரையீரலைச் சென்றடைகின்றது. இதனால் இரத்தம் நன்கு சுத்திகரிக்கப்படுகின்றது. அசுத்த இரத்தம் வெளியேற்றப்படுகின்றது.
2. நோய் கிருமிகளைக் கொன்று நோய் எதிர்ப்புச் சக்தியையும் ஆழ்ந்த தூக்கத்தையும் தருகின்றது.
3. இருதயம், நுரையீரல், சுவாசப்பை என்பனவற்றை நேராக தாக்கி பலம் பெறச் செய்கிறது.
4. அனைத்துச் சுரப்பிகளையும் ஒழுங்காகத் தொழில்படச் செய்கின்றன.
5. தேவையற்ற சதைகளையும் கொழுப்பையும் கரைத்து உடலை வளம்பெற வைக்கின்றது.
6. நரம்பு மண்டலங்கள் நரம்புச் சக்கரங்கள் அனைத்தையும் நன்கு இயங்க வைத்து ஆண்மையை மேலோங்கச் செய்வதுடன் பெண்மையை உன்னதம் பெற வைக்கிறது.
7. உடல், உள்ளம், ஆன்மா மூன்றையும் ஒருங்கிணைத்து செயல்பட வைக்கிறது.
8. மனதை ஒருமுகப்படுத்துகிறது.
9. மனிதனை தெய்வீகத் தன்மையுடையவனாக்குகிறது.

மேற்குறிப்பிட்ட நன்மைகளை யார்தான் அடைய விரும்பமாட்டார்கள். இந்த இணையற்ற யோகாசனப் பயிற்சியை சிறுவர் முதல் வயோதிபர் வரை தகுந்த ஆசிரியர் மூலமாகப் பெற்று நாள்தோறும் செய்துவரும் போது யோகாவின் பலனை நிச்சயம் அடையலாம் இது உறுதி.


## யோகாசன வகுப்பு

கனேடிய இலங்கை பட்டதாரிகள் சங்கத்தின் சார்பில் கடந்த 3 வருடங்களாக அனுபவமிக்க ஆசிரியரால் பிரதி ஞாயிறுதோறும் காலை 7:30 மணிக்கு Markham /Ellesmere இற்கு அருகாமையில் வோபன் கொலிஜியேற்றில் (Woburn Collegiate) நடாத்தப் பட்டு வருகின்றது.

மேலதிக தொடர்புகளிற்கு - சத்தி: **291-5853**



**Neelam SILK**

வட அமெரிக்காவில் உயர்ந்தரப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

**நீலம் சில்க்**

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 8வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும் நீலம்சில்க்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்



கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)

CALL: (416) 778- 7455
FAX: (416) 778-8484



| | | | |
|---|---|---|---|
| கிரகப் பொருத்தம் பார்த்தல் | 3 | 4 | சாதகக் குறிப்பு கணித்தல் |
| ல | யோகா சோதிடம் (416) 299-8361 | | 6 |
| 12 | | | எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல் |
| சுபமுகூர்த்தம் கணித்தல் | 10 | 9 | பலன் பார்த்தல் |





**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12
**Professional Photographer - கதிர்**
☎: (416) **750-8118**
*2425 EGLINTON AV. E. UNIT 3*
*KENNEDY/ EGLINTON, SCARBOROUGH*




**OODAM MAINTENANCE WORKS**

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING




*>Railing >Fencing >Welding*

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

# நீரிழிவு ஒரு நோயா?

-ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி, பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்



கண் அழுத்த நோயின் அறிகுறிகள் பின்வருவனவாய் தனித்தும் ஒருமித்தும் இருக்கலாம்.

1. பார்வை மங்கலாக இருக்கும்
2. தலைவலி அடிக்கடி வரும்
3. மங்கலான வெளிச்சத்தில் பார்வை சரியாகத் தெரியாது.
4. அதிகாலையிலோ அல்லது இரவிலோ வெளிச்சத்தைப் பார்த்தால் வட்ட வட்டமான வண்ண வளையங்கள் தெரியும்.
5. திரைப்படம் பார்த்து விட்டு இருட்டினில் வரும்பொழுது கண்களைச் சுற்றிலும் லேசாக வலிக்கும்.
6. பக்கத்துப் பார்வை இருக்காது.
7. கண்ணாடி போட்டாலும் பார்வை சரியாகத் தெரியாது.

பலர் இக் கண் அழுத்த நோயையும், "கற்றாக்ட்" (Catract) என்று சொல்லப்படும் விழியாடித்திரை நோயையும் ஒன்றெனத் தவறாக எண்ணிக் குழம்புகின்றனர். இரண்டு நோய்களும் வெவ்வேறானவை. இந் நோயை "கருமுத்து" அல்லது "நீலமுத்து" என்று அழைப்பார்கள். கண் அழுத்தம் (Occular Hypertension) என்பது வேறு ஒரு நோயாகும். இது கண் நரம்புகள் பாதிக்கப்படாது வரக்கூடிய நோய். இந்நோயில் பக்கப் பார்வையும் பாதிக்கப்படுவதில்லை. நீண்ட காலத்திற்கு கண் அமைப்பு நரம்புகளும் பழுதடையாமல் இருக்கும்.

இந்நோயைக் குணப்படுத்தாவிட்டால் பார்வை இழப்பு ஏற்படும் என்பதால் தகுதி வாய்ந்த மருத்துவரிடம் சிகிச்சை பெற்று இந்த நோயையும் அதனால் ஏற்படும் பார்வை இழப்பையும் சரி செய்ய முடிதுயும். கண்ணில் தண்ணீர் உண்டாவதைக் குறைப்பதற்கும் தண்ணீரை வடியச் செய்யவும் (Drain) மருத்துவ ரீதியாக சிகிச்சை செய்யப்படுகிறது. மிதமாக உள்ள திரவ பதார்த்தம் வெளியே அகற்றப்பட்டதும் சிகிச்சை வெற்றியடைகின்றது. கண் அழுத்தம் குறைந்து சிகிச்சை பலனளிக்காத அளவிற்கு நோய் முற்றியிருந்தால் சிறிய அறுவைச். சிகிச்சை மூலம் சரி செய்யப்படுகிறது. வடிக்கும் நரம்புக் குழாய்களின் (Drainage Canal) அடைப்பை ஈடுகட்டுவதற்காக செயற்கை வடிகால்களை அமைக்கும் பொருட்டே இச்சிறு அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது.

இந்நோய்க்கு அறுவைச் சிகிச்சை செய்யும் நேரம் மிகவும் குறைவானது. செய்து கொண்ட பின்னர் தகுந்த நேரத்தில் ஆய்வு செய்து, கண்ணாடி அணிவதன் மூலம் தற்காலிகமாக இழந்த பார்வையை மீண்டும் பெறலாம். கண்ணாடிக்குப் பதிலாக விழி மேல் ஒட்டு ஆடி **(Contact Lens)** அல்லது விழி உள் ஒட்டு ஆடி (Intraoccular Lens) பொருத்திக் கொள்ளலாம். எனவே வந்த பின் வருந்துவரை விட வருமுன் காத்துக் கொள்வதே நல்ல வழியாகும்.

மீண்டும் கூறுவதாயின் கண்ணின் பளிங்கு போன்றவில்லை அல்லது (Lens) இல் இருக்கும் ஒளி புகும் தன்மையை இழந்து அது வெள்ளை நிறம் அடையும் போது அதை (Cataract) வெள்ளெழுத்து என்று கூறுகிறோம். இது வயதால் ஏற்படும் நசிவு (Degeneration) நிலைமை ஆகும். இது தலைமுடி நரைப்பது, தலையில் வழுக்கை ஏற்படுவது போன்ற ஒரு விதமான நசிவு நிலையாகும். சிலருக்குப் பிறவியிலேயே இது ஏற்படுகின்றது. அல்லது அடிபட்டு அல்லது கண்களின் மற்றும் விழித்திரை (Retina) போன்ற உறுப்புகளில் ஏற்படும் நோய்களாலும் வெள்ளெழுத்து உண்டாகின்றது.

குழந்தைப் பருவத்திலிருந்து கிட்டப்பார்வைக்காக கண்ணாடியைத் தொடர்ந்து அணிபவர்களை இந்த "கற்றாக்ட்" நோய் பெரும்பாலும் பாதிப்பதில்லை, காரணம் சூரிய ஒளி நேரடியாகத தாக்காததினால்தான் இந்த நோய் வெப்ப நாடுகளில் மட்டுமே அதிகமாக இருக்கிறது.

மூப்படைந்த ஒருவர்க்கு பொதுவாக 60 வயதுக்கு மேல் இந்த நோய் ஏற்படும். அல்லது குறிப்பாகச் சொல்லின் வளரும கண்புரை அல்லது விழிப்புரையின அறிகுறிகள் (Symptoms) கீழ்க் கண்டனவாய் அமையும்.
(இவைகள் ஒருவரால் உணர்ந்து அனுபவிக்கப்படுவனவையே)
- பார்வை அல்லது தோற்றம் மங்கலாயிருத்தல்,
- பகல் அல்லது இரவில் பார்ப்பதில் கஷ்டப்படல்
- பகல் வெளிச்சம் அல்லது இரவு நேரங்களில் உள்ள வெளிச்சத்தைப் பார்ப்பதில் கூச்சம் ஏற்படல்.
- பார்க்கப்படும் பொருள் ஒன்று இரண்டாகவோ அல்லது பலதாகவோ தோற்றம் அளித்தல்.
- உன்னிப்பான பாாவையில கஷ்டம் ஏற்படல்.

(இவ்வறிகுறிகள் வேறு சில காரணங்களாலும் வரலாம். அத்துடன் இவை மெல்ல மெல்லவே வரும் அறிகுறிகளாகீம். ஆகையால் கண் மருத்,துவ நிபுணரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வது நன்று.)

## நினைவில் நிலைத்து நிற்கவேண்டியவை

1. மகா அலெச்சாண்டர் (Alexander the Great) எந்த நாட்டவர்? மசிடோனியா ( Maxedonia)
2. பூமியை விண்வெளியில் வலம் வந்த முதல் விண்வெளி வீராங்களை (பெண்) எந்த நாட்டைச் சேர்ந்தவர்
   ரஷ்யா (Russia)
3. கனடாவில் அதிஉயர்ந்த மலைச் சிகரம் யாது?
   லோகன் சிகரம் (Mt. Logan)
4. உலகில் அதிநீண்ட காலம் உயிர்வாழும் உயிரினம் எது?
   ஆமை
5. தொலைக்காட்சிச் சாதனத்தை (Television) உருவாக்கியவர் யார்?
   ஜோன் லொஜி பயாட் (John Logie Baird)
6. ஐக்கிய அமெரிக்க அரசுகளின் (U.S.A.) முதலாவது சனாதிபதி யார்?
   ஜோர்ஜ் வோஷிங்ரன் (George Washington)
7. எதிர்காலத்தில் உலகப்போர் ஏற்பட்டால் எத்தனையாவது உலகப்போராக இருக்கும்?
   மூன்றாவது (3வது)
8. ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதி (UNPF) என்ற நிறுவனம் எந்த நாளை உலக சனத்தொகை நாளாக (World Population Day) தெரிவு செய்துள்ளது?
   யூன் 16. 1999
9. வெனிஸ் நகர வர்த்தகன் (Merchant of Venice) என்ற நூலை எழுதியவர் யார்?
   வில்லியம் ஷேக்ஸ்பியர் (William Shakespeare)
10. உலகில் அதிகூடிய சனத்தொகை உடைய நாட்டின் தலைநகரம் யாது?
    பேய்பிங் ஸ்ரீபீக்கிங்) [Beijing (Peking)]

உலக அதிபாரக் குத்துச் சண்டை சம்பியன்
Evander Hollvfield (இவான்டெர் கோலிபீல்ட்)

-A. Arunthavarajah




நான் ஒரு
வழக்கறிஞர் இல்லை


குடிவரவுச் சட்டம்
Immigration Law

குற்றவியல் சட்டம்
Criminal Law

குற்றவியல் தண்டனை
பெறுவதனால்....



உங்கள் வதிவிட உரிமை
- Permanent Resident
குடியுரிமை
- Citizenship
குடும்ப ஒன்றிணைவு
- Family Sponsorship
பாதிக்கப்படலாம்.



வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?
அடுத்து
செய்யவேண்டியது என்ன?



முதலில்
வைத்தியசாலைக்கு
செல்லுங்கள்...

பின் இவரை அழையுங்கள்...

எஸ்.கே. தீசன்
(416) 631-6322

IMMIGRATION
CONSULTANT
Christina Staden, M.A.
Member of the Association of Immigration
Counsel of Canada
18 years experience
Free assessment,
LOW COST,
money back guarantee
*INDEPENDENT ★ BUSINESS ★FAMILY
★HUMANITARIAN ★STUDENT

Tel. Toronto (416) 222-5254
Mississauga (905) 501-0307
9AM.-9P.M.

TAMIL INSURANCE CLAIMS
CONSULTANT
தமிழில் இலவசஆலோசனை
வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?
※ தகுந்த ஆலோசனை
※ சட்ட உரிமைகள்
※ விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
※ உரிய நஷ்டஈடு
※ மற்றைய இழப்பீடு
※ மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும், அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள

ரவி நடராஜா (12 வருட காலம் அனுபவமுள்ளவர்)
தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 245-6555
FAX: (416) 245-7766
2095 Weston Rd., #201 (South of HWY 401),
Toronto, Ont. M9N 1X7

நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU

Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்பாளர்களின் தரமான பொருட்களின் அணியில், மேலும் ஒரு நாவிற்கினிய படைப்பு!

இதோ!




நிரு பிராண்ட் பரிசுத்திட்டத்தின் கீழ் கெட்டிப்பால் லேபல்களுக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்.

சுவையின் தரத்தை ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள்

நிரு பிராண்ட் "கெட்டிப்பால்"

தரமான நிரு பிராண்ட் தயாரிப்புகள் கனடிய சுகாதார விதிகளுக்கமைய தயாரிக்கப்படுபவை.

சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

Niru Enterprise Inc., Scarborough, Ontario Tel: (416) 750-1976

நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU நிரு NIRU

சூரியக்குடும்பம் 3

# விண்வெளி

*தருபவர் - கனி*

இன்று சூரியக்குடும்பம் எவ்வாறு உருவானது என்பதற்கான Solar Nebula சூரிய தூசுக் கொள்கை பற்றிப் பார்ப்போம். "பிக்பாங்" இன் பின்னர் சுமார் மில்லியன் வருடங்களின் பின்னர் பிரபஞ்சத்தில் சடத்தின் ஆட்சி தொடங்கியது. அதன் பின்னர் பிரபஞ்சத்தில் காலத்திற்குக் காலம் கலக்சிகள் தோன்றின. கலக்சிகளில் நட்சத்திரங்கள் தோன்றத் தொடங்கின. இது பற்றிப் பிரபஞ்சம் -19 என்ற பகுதியில் ஓரளவுக்குத் தெளிவாகக் கூறினேன். கதிர்வீச்சுச் சக்தி, வெப்ப சக்தி, மின்காந்த சக்திகளின் தொடர்ச்சியான தொழிற்பாடுகளின் விளைவாக சிறிய அணுக்கள் சில மூலகங்கள், தூசுக்கள் என்பன ஈர்ப்பு சக்தியின் காரணமாக ஒன்றாகத் திரண்டு வரத் தொடங்கின. மேலும் மேலும் இவை ஒன்றாகத் திரள, இவற்றின் நெருக்கம் காரணமாக விண்வெளியில் மிகப்பரந்த வெளியில் பிரகாசமான தூசுக் கூட்டம் தோன்றும். இவற்றையே Nebula (நெபுலா) என்பார்கள். இவ்விதம் உருவான ஒரு நெபுலாவே எமது சூரியத் தூசுக் கூட்டம். (இனி நாம் இதனைச் சூரியத் தூசுக்கூட்டம் எனக் கூறாது சூரிய நெபுலா என்போம்)

பிரகாசமான சூரிய நெபுலா வானது ஈர்ப்பு சக்தியின் காரணமாக ஒடுங்கத் தொடங்கியது. அத்துடன் அதில் அடங்கியிருந்த தூதுக்களும் வாயுக்களும் சுழற்சிக்குள்ளாகத் தொடங்கின. இந்தச் சுழற்சியினதும், ஈர்ப்பு சக்தியினால் ஆன ஒடுங்கலிலும் சேர்ந்து சூரிய நெபுலாவானது ஒரு தட்டு (disk) வடிவில் ஆன தோற்றத்தில் சுழற்சிக்குள்ளாகத் தொடங்கியது. இத்தட்டின் மையப்பகுதியானது மேலும் ஒடுங்கி ஒன்றுதிரண்டு சூரியனாக, புறப்பகுதியில் இருந்தவை தம்முள் ஒன்று திரண்டு கோள்களாக மாறி மத்தியில் இருந்த சூரியனை வலம் வரத் தொடங்கின. மத்தியில் உண்டான அபரிமிதமான நெருக்கமும் வெப்பமும் சேர்ந்து மையப் பகுதியை சக்தியைக் கொண்ட சூரியனாக மாற்றின. ஏனையவற்றை கோள்களாக மாற்றின. சரி இந்தக் கொள்கையான, ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது எனப்பார்ப்போம்.

முதலில் ஒடுங்கிய சூரிய நெபுலாவானது ஒரு தட்டு வடிவினது. சூரியனையும் அதன் கோள்களையும் சேர்த்துப் பார்க்க, அதாவது சூரியக்குடும்பமானது ஒரு தட்டு வடிவிலேயே அமைந்துள்ளது. அடுத்துச் சூரிய நெபுலாத் தட்டானது ஒரே திசையில் தான் சுழற்சியைக் கொண்டிருக்க முடியும். நமது சூரியக் குடும்பத்தின் கோள்கள் எல்லாம் ஒரே திசையாகத்தான் அதாவது ஆரம்பத்தில் சூரிய நெபுலா சுழன்ற திசையாகத்தான் சூரியனை வலம் வருகின்றன. இனி திரட்சி - ஒடுங்கல் நடவடிக்கையின் தொடரில் பாரமான மூலகங்கள் மத்தியிலும் வெளியே போகப்போக பாரம் குறைந்த மூலகங்கள் வாயுக்கள், பனித் திரட்சிகள் என்பன காணப்படும். இதன் காரணமாகவே கோள்கள் எல்லாம் வெவ்வேறு பௌதீக இயல்புகளைக் காட்டுகின்றன. உதாரணமாக சூரியனுக்கு கிட்ட உள்ள கோள்கள் பாறைகளாகவும் பின்னால் போகப் போக சுக்கிரன், சனி போன்ற வாயுக் கோள்களாகவும், அதன் பின் புளூட்டோ போன்று பனிக் கோள்களாகவும் காணப்படுகின்றன. மேலும் மத்தியில் சூரியனின் வெப்பம் கூடுதலாகவும் சூரியனில் இருந்து செல்லச் செல்ல வெப்பம் குறைந்தும் காணப்படுகிறது. புதனின் வெப்பநிலை உயர்வாக காணப்படுகிறது. புளூட்டோ மிகக்குறைந்த வெப்பநிலையில், குளிர்ந்த பனி உலகமாகக் காணப்படுகிறது. (புதன் முதலாவது கோள், புளூட்டோ கடைசிக்கோள்) அடுத்ததாக நான் சென்ற தடவையில் கூறியது போலவே கதிரியக்க முறையிலான கோள்களின் வயதுகளை நிர்ணயிற்பின் போது கோள்களின் வயதுகள் ஏறக்குறைய ஒரே அளவினதாகக் காணப்பட்டது. இதுகூட சூரிய நெபுலாக் கொள்கையையே ஒத்துப்போகின்றது.

எனவே சூரியக் குடும்பத்தின் அமைப்பு (தட்டு) சுழற்சித்திசை (ஒரேதிசை), கோள்களின் பௌதீக இயல்புகள் (அடர்த்தி கூடியவை உள்ளேயும் , அடர்த்தி குறைந்தவை வெளியேயும்) வெப்பநிலை, வயது என்பவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்குகையில் சூரியக் குடும்பமானது சூரிய நெபுலா என்ற தூசுக் கூட்டத்தின் ஒடுங்குகையினால் தோன்றியது என்ற கொள்கை ஏற்புடையதாகிறது. அத்துடன் சூரியன் என்ற நட்சத்திரத்தின் தோன்றுதலின் பக்க விளைவுகளே அதன் கோள்கள் என்றாகிறது.

சூரியக் குடும்பம் எவ்விதம் உருவாகியது என்று பார்த்தோம். சூரியன் அல்லது நட்சத்திரம் ஒன்று எவ்விதம் உருவாகிறது, அது உருவாகும் போது என்ன என்ன நிகழ்வுகள் ஏற்படுகின்றன என்பது பற்றி விண்வெளியில் நட்சத்திரங்கள் என்ற அடுத்த பகுதியில் தெளிவாகக் கூறுகின்றேன். மறுமுறை சந்திக்கும் போது எவ்விதம் கோள்கள் உருவாகின எனப்பார்ப்போம்.

Ultra Graphic
"Your Ideas Take Best Shape"

Other Services:
- Art Works
- Rubber Stamps
- Lamination
- Certificates
- Foil Printing
- Calenders
- Laser Colour Prints

Anything you like to Design & Prin

றோல் லேபல்

Label on Roll · Tags · Labels · Price Tags · Bumper Stickers · One Colour to Four Colour

Short Quantities
Large Quantit
Labels, Price Ta
Business Car
Ticke
Bumper Stick

Call: Loga

Tel: (416) 282-5859

AIRPORT SERVIC
&
MOVING VAN



ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போ
வருவதற்கான சேவைகளும், மற்று
பொருட்களை இடமாற்றம் செய்வதற்க
சேவைகளிற்கு ☎: (416) 759-05

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

-தொகுத்துத் தருபவர் - பரம்

1955

1. ஆசை அண்ணா அருமை தம்பி
2. உலகம் பலவிதம்
3. எல்லாம் இன்பமயம்
4. ஏழையின் ஆஸ்தி
5. கள்வனின் காதலி
6. கல்யாணம் செய்துக்கோ
7. கணவனே கண் கண்ட தெய்வம்
8. கதாநாயகி
9. காதல் பரிசு (சாம்ராட்)
10. காவேரி
11. கிரகலஷ்மி
12. குலேபகாவலி
13. குணசுந்தரி
14. கோமதியின் காதலன்
15. கோடீஸ்வரன்
16. செல்லப்பிள்ளை
17. டவுன் பஸ்
18. டாக்டர் சாவித்திரி
19. நல்ல தங்கை
20. நல்ல தங்காள்
21. நல்லவன்
22. நம் குழந்தை
23. நீதிபதி
24. பெண்ணரசி
25. போர்ட்டர் கந்தன்
26. மகேஸ்வரி
27. மங்கையர் திலகம்
28. மாமன் மகள்
29. மிஸ்ஸியம்மா
30. முல்லைவனம்
31. முதல் தேதி
32. மேனகா
33. மேதாவிகள்
34. வள்ளியின் செல்வன்



· 'குலேபகாவலி'- டி.ஆர். ராஜகுமாரியுடன்

1955ம் ஆண்டு 34 படங்கள் வெளியாகின. இந்தத் தொகை அந்தக் காலங்களில் உள்ள சராசரி அளவானதாகும். அந்தக் காலங்களில் பல முன்னணி நடிகர் இருந்தார்கள். எம்.ஜி.ஆர். இந்த ஆண்டு ஒரே ஒரு படத்தை மாத்திரம் நடித்திருந்தார். படத்தின் பெயர் 'குலேபகாவலி' இப்படத்தின் கதாநாயகியாக நடித்தவர் டி.ஆர். ராஜகுமாரி. சாதாரண சிறுசிறு பாத்திரங்களில் நடித்து வந்த எம்.ஜி.ஆரிற்கு 1950ம் ஆண்டு வெளிவந்து "மருத நாட்டு இளவரசி" என்ற படம் மிகச் சிறந்தமுறையில் ஓடியதால் ஹீரோ என்ற தகுதியை பெற்றுக்கொடுத்தது. அதற்கு அப்புறம் வெளிவந்த 'மந்திரி குமாரி', 'மர்மயோகி', 'மலைக்கள்வன்' என்ற படங்கள் எம்.ஜி. ஆரை முழுக் கதாநாயகன் ஆக்கியது.



'குலேபகாவலி'

இவ்வாண்டு (1955) சிவாஜியின் 6 படங்கள் வெளிவந்தன. 'காவேரி', 'முதல்தேதி', 'உலகம் பலவிதம்', 'மங்கையர் திலகம்', 'கோடிஸ்வரன்' மற்றும் 'கள்வனின் காதலி'. இப்படங்களில் பெயர் சொல்லக் கூடியதாக இருந்த படம் 'மங்கையர் திலகம்'. இப் படத்தில் பத்மினி, சிவாஜியுடன் கதாநாயகியாக நடித்துள்ளார். சென்னை சினிமா ரசிகர்கள் சங்கம் இப்படத்திற்கு சிறந்த படம் (1955) என்ற பரிசிலை வழங்கினார்கள்.

மேலும் "காவேரி" என்ற படத்தில் சிவாஜி தனியாக பரதநாட்டியம் ஆடி ரசிகர்களின் மனதைப் பறித்தார். இவ்வாண்டு வெளியாகிய 'கள்வனின் காதலி' என்ற படத்தின் கதையை அமரர் "கல்கி" அவர்கள் எழுதியிருந்தார்.

இந்தக் கதையில் சிவாஜி, வறுமைப் பேயினால் பீடிக்கப்பட்ட மிக ஏழையான குமாஸ்தாவாக நடித்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இவ் ஆண்டு வெளிவந்த படங்களில் பலரின் அபிமானத்பை பெற்ற படங்களாக "கணவனே கண்கட்ட தெய்வம்", "மிஸ்ஸியம்மா" வைக் கூறலாம். சிறந்த நடிகராக ஜெமினி கணேசனும், சிறந்த நடிகை யாக அஞ்சலிதேவியும் 'கணவனே கண்கண்ட தெய்வம்' படத்தில் நடித்தமைக்காக வழங்கப்பட்டது. உபநடிகருக்காக K. சாரங்கபாணிக்கு 'மிஸ்ஸியம்மா' படத்திலும், உபநடிகைக்காக ராகினிக்கு 'மங்கையர்திலகம்' படத்திலும நடித்தமைக்காக வழங்கப்பட்டது.


**ELECTRICAL REPAIRS**

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள்
றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த
செலவிலும்,சிறந்த முறையிலும்
குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்
முருகதாஸ் - ☎ 261-6883

**RAAJ WATCH WORK**




சகல விதமான மணிக்கூடுகளும் (Watch & Clock) குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாபனம்.
NATHAN ☎: (416) 265-5580
2885 LAWRENCE AVE. EAST, BRIMLY/ LAWRENCE (Close to Biway)


## நான் வாழப் போகிறேன்

-வீணை மைந்தன்

### சுவடு 25

நடிகர் திலகம் அவர்கள் நேரத்தைப் பார்க்கவும். கீழே இருந்து சாப்பாட்டுக்கு அழைப்பு வரவும் சரியாக இருந்தது. நேரம் அவருடைய வாழ்க்கையில் பொன்னுக்குச் சமானம். எதுவுமே நேரப்படி நடக்க வேண்டும் என்று விரும்புவர். "பராசக்தி" படப்பிடிப்பின் போது முதன்முதல் காட்சி படமாக்கப்படப் போகுது என்று தெரிந்தவுடன் "அன்று ஏவி எம் ஸ்ருடியோவில் எப்படி எல்லாக் கலைஞர்களுக்கும் முன்னோடியாக நேரம் தவறாது கால் பதித்தாரோ இன்றும் கூட ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்பும் அவரது வாழ்வின் எல்லாக் காரியங்களிலும் 'நேரம் தவறாமை' என்பது கண்டிப்பான ஒழுங்குடன் கடைப்பிடிக்கப்படுகிறது.




'அன்னை இல்லத்தில்' சரியாக ஒரு மணிக்குச் சாப்பாடு. உணவுக் கூடத்தில் எல்லோரும் கூடினோம். அன்று ஒரு ஞாயற்றுக் கிழமை வெறுமனே சிவாஜி சார் அவர்களைப் பார்த்துப் பேசினால் போதும் என்று எண்ணிய எனக்கு விருந்தே வைத்தார். இது என்னவோ விட்ட குறை தொட்டுகுறை போலும். என்னை நான் அவருடைய சாதாரண இரசிகர்களுள் ஒருவராகக் கருதுவதில்லை. அதற்கும் மேலானவன். எத்தனை பேர் எனக்கு சிவாஜி அவர்கள் பற்றித் தவறான அபிப்பிராயங்களைக் கூறியிருப்பார்கள். அவருடன் பழகாமலேயே அவருடைய உள்ளத்தைப் புரிந்தவன் நான். இப்படியான உள்ளுணர்வு அறிதல் சிலருக்கு அமையப் பெறுதல் இயற்கையே!என் கணக்குத் தவறியதே இல்லை. ஆனபடியால் தான் எங்களுடன் அதிகம் நேரடித் தொடர்பு இல்லாமலேயே சில தலைவர்களையும், பெரியவர்களையும், நண்பர்களையும் நாங்கள் நேசிக்கின்றோம் என்றால் அங்கு இருபாலாருக்குமிடையே உள்ள "உள்ளுணர்வு அறிதல்" எனும் ஈர்ப்புச் சக்தியே ஆகும்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் இவ் வுணர்விற்கு "விடுதல் அறியா விருப்பு" என்று மிக அழகானதொரு வார்த்தைப் பிரயோகத்தை அறிமுகம் செய்து வைத்துள்ளார். அத்தகையதொரு "விடுதல் அறியா விருப்போ" நான் நடிகர் திலகம், கலைஞர், அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் ஆகியோரிடம் கொண்டுள்ள விருப்பாகும்.

பெற்றோரைப் பணிதல், வணங்குதல் எனும் பண்பு தமிழர்களிடத்துள்ள மிகமிகப் போற்றுதலுக்குரிய பண்பாகும். பெரியவர்களை வணங்குதலும் இதற்குள் அடங்கும். சிவாஜியின் பிள்ளைகளுள் ஒருவரான பிரபு சாப்பாட்டுக் கூடத்திற்கு வந்ததும் தந்தையின் பாதங்களைப் பணிந்து வணங்கினார். அவர்களுடைய குடும்பத்தில் சிறுகுழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அந்தச் சக்கரவர்த்திக்கு முதல் மரியாதை செய்த பின்பே கூடத்தில் அமர்ந்தார்கள். இந்த அரிய பண்பு என்னை மிகவும் ஆகர்சித்தது.

யாழ்ப்பாணத்தவர்களிடையே பொதுவாக இப்படிப் பெற்றோர்களைப் பணிதல், வணங்குதல் என்பது நான் உட்படக் கடைப்பிடிக்கப்படாத பழக்கம். ஆனால் மனதளவில் பக்தியும் அன்பும் மரியாதையும் உண்டு. சிறு வயதிலிருந்து எங்களைப் பழக்காதிருந்தமையும் ஒரு காரணமாக இருக்கலாம். வாரத்தில் ஞாயிறு மட்டும் அவர்களுடைய குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒன்று கூடி மதிய போசனம் உண்பது ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படும் பழக்கம். சில சமயம் வெளியூர் படப்பிடிப்பு இருந்தாலோ வேறு முக்கிய அலுவல்கள் நிமித்தம் பயணங்கள் மேற் கொண்டிருந்தாலோ விதி விலக்குண்டு.



"ஐயா வாங்க, இப்படி உட்காருங்க!" நடிகர் திலகத்திற்கு வலதும் இடதுமாக நானும், நண்பர் ஹமீதும் அமர்ந்தோம். சுமார் இருபத்தி ஐந்து பேர்களாவது ஒரே தடவையில் உட்கார்ந்து உணவு உண்ணக்கூடிய நீண்ட பெரிய ஹோலில் அந்த நீண்ட சாப்பாட்டு மேசையைச் சுற்றி முதலில் ஆண்கள் யாவரும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் உட்பட அமர்ந்திருந்தார்கள். "அமீது உமக்காகவே கலால்மீற் ' வாங்கி கறி சமைத்துள்ளோம். ஐயா! எத்தனை தடவை இங்கு வாறீர் போறீர் ' எங்க வீடு இருப்பது உமக்கு நினைவுக்கு வரேல்ல" நீரெல்லாம் இப்ப பெரியாளாயிட்டீர்...!" என்று அன்புடன் நண்பர் ஹமீத்திடம் உள்ள நட்புரிமையைக் காட்டினார்.

கமலாம்மா, சாந்தியம்மா உட்பட வீட்டுப் பெண்கள் எல்லோரும் பரிமாறத் தொடங்கினார்கள். மிகவும் பக்குவமாகச் சமைத்திருந்தார்கள். "சிவாஜி வீட்டு விருந்து" என்பது உண்டு சுவைத்தால் தான் புரியும். மிக அருமையான மதிய விருந்து. ஐயாவிற்குத் 'தயிர்ப்பச்சடி' வை. இந்தத் தயிர்ப் பச்சடி என்பது இதற்கு முன்பு நான் சுவைக்காதது. தலைவாழையிலையில் தான் எல்லோருக்கும் பரிமாறினார்கள். சிவாஜி அவர்கள் அளவோடு உண்பவர் மிகவும் இரசித்துச் சுவைத்து உண்பது அவருடைய இரசனை. மீண்டும் வாழையிலையைக் கழுவித் துடைத்தாற் போன்று ஒரு துகள் கூட மிச்சமின்றி அவருடைய இலை சுத்தமாயிற்று. எதிலும் ஒரு ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்கும் அவருடைய பழக்கம் என்னை வெகுவாகக் கவர்ந்தது.

சாப்பாட்டிகெுப் பின்பு Desert அதாவது ஒரு இனிப்புப் பண்டத்தைச் சுவைப்பது வழக்கம் தானே. அவர்கள் வீட்டிலே தயாரிக்கப்பட்ட "போளி" என்ற இனிப்புப் பலகாரத்தைச் சுவைக்க வைத்தார்கள். "ஐயா! இது இப்படிச் சாப்பிடுவதில்லை, இது நம்பாளின்ரை உணவில்லை. இது கன்னடக்காரன் நமக்கு அறிமுகம் செய்து வைத்தது. இதன்மேலே முதலில் நெய் ஊற்றனும்" சுத்தமான நெய்யை போளியின் மேல் துளித்துளியாக ஊற்றினார். பின் அதைச் சுருட்டினார். சுருட்டியதை கையில. எடுத்து உண்ணக் காட்டிக் கொடுத்தார்.

இப்படியாக எங்கள் கலைச் சக்கரவர்த்தி தனது உயிருக்குயிரான கண்மணி, பிள்ளைகள் என்று விழிக்கின்ற ஒரு இரசிகனுக்கு அருகிருந்து குடும்பத்தார் விருந்து படைத்து மிகமன மகிழ்ச்சியுடனும், உரிமையுடனும் உபசரித்தாரே இந்த "ராஜ விருந்து" எனது வாழ் நாளில் மறக்க முடியாதது.

"வந்த நல்விருந்தினரை முகம் மலர்ந்து விரும்பி உபசரிப்பவனின் வீட்டிலே தன் நெஞ்சம் விரும்பிச் செல்வத் திருமகள் தங்கி வாசம் செய்வார். இது உறுதி"என்ற வள்ளுவப் பெரியாரின் திருவாக்கு அங்கு உறுதியாகவே குடி கொண்டிருந்தது.
"அகன் அமர்ந்து செய்யார் உறையும் முகன் நல்விரும்புவான் இல்" -திருக்குறள்

அடுத்த தொடரில்...

# விளையாட்டுத் தகவல்கள் (24)

எஸ். கணேஷ்



## FIFA WORLD PLAYER OF THE YEAR - ZIDANE

### உதைபந்தாட்டம்

அகில உலகமும் ஒரே நேரத்தில் பார்க்கும் விளையாட்டு World Cup உதைபந்தாட்டம் ஆகும். பல கோடிக்கணக்கான ரசிகர்கள் கண்டு களிக்கும் இந்த World Cup - 1998 வெகுவிமரிசையாக France இல் நடந்து வெற்றிக் கிண்ணத்தை France ம் வென்றது யாவரும் அறிந்ததே. இவ் World Cup நடந்து முடிந்த பின்பு இதில் பலதுறைகளிலும் சிறந்தவர்களை தெரிவு செய்து பரிசும் பெரும்தொகைப் பணமும் வழங்கப்படும். இவ் பல்துறை விருதுகளில் ஆக கூடிய பெறுமதி உடைய விருது Best World Player of the Year. இவ் விருது வழங்கும் வைபவம் February 1ம் திகதி 1999 Spain இல் உள்ள Barcelona நகரில வெகு விமரிசையாக நடைபெற்றது.


இம்முறை இவ் விருதுக்கு பெரும் போட்டி நிலவியது. 132 நாடுகளை சேர்ந்த Coaches கூடி இருந்து Vote பண்ணுவது வழக்கம். இப் போட்டியில் இறுதி சுற்றுக்கு மூன்று திறமையான வீரர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். முதல் 1996, 1997 ஆண்டு தொடர்ந்து இரு ஆண்டுகள் இவ்விருதை வென்ற Brazil நாட்டை சேர்ந்தவரும் Inter Milan கழகத்தில் விளையாடுபவரும் ஆன **Ronaldo**, Croatia நாட்டைச் சேர்ந்தவரும் Real Madrid கழகத்தில் விளையாடுபவரும் ஆன **Davor Suker**, France நாட்டுக்கு இம்முறை World Cup ஐ பெற்று கொடுத்தவரும், Juventus கழகத்தில் விளையாடுபவரும் ஆன **Zinedine Zidane**. இம் மூன்றுவீரர்களிலும் பலத்த போட்டி நிலவியபோதிலும் Zidane 93 புள்ளிகளை பெற்று இவ் விருதை வென்றார்.

| Player of the year Voting | 1st | 2nd | 3rd | Total |
|---|---|---|---|---|
| 1. Zidane (France) | 93 | 15 | 8 | 518 |
| 2. Ronaldo (Brazil) | 15 | 26 | 11 | 614 |
| 3. Suker (Croatia) | 6 | 20 | 18 | 108 |
| 4. Owen (England) | 0 | 8 | 19 | 43 |
| 5. Batisuta (Argentina) | 3 | 6 | 7 | 40 |
| 6. Rivaldo (Brazil) | 1 | 9 | 5 | 37 |
| 7. Bergkamp (Holland) | 1 | 7 | 7 | 33 |

*முதல் சுற்றில் 93 புள்ளிகளை பெற்றதால் Zidane தெரிவானார்.*

### இதுவரை தெரிவுசெய்யப்பட்ட Top Three Players

| | | |
|---|---|---|
| 1998 | 1. Zidane (Juvetus/France)<br>3.Suker (Real Madrid/Croatia) | 2.Ronaldo (Intermilan /Brazil) |
| 1997 | 1. Ronaldo (Intermilan/Brazil)<br>3. Bergkamp / Zidane | 2.Roberto Carlos (Real Madrid/Brazil) |
| 1996 | 1. Ronaldo (Barcelona/Braizl)<br>3. Alan Shearer (Newcastle/England) | 2 George Weah (Acmilaw/Liberia) |
| 1995 | 1. George Weah (Acmilan / Liberia)<br>3. Klinsman (Bayern/Germany) | 2. Maldini (Acmilan/Italy) |
| 1994 | 1. Romario (Barcelona/Brazil)<br>3. Baggio (Juventus / Italy) | 2. Stoichkov (Barcelona/Bulgaria) |
| 1993 | 1. Baggio (Juventus/Italy)<br>3.Bergkamp (Inter/Holland) | 2. Romario (Barcelona/Brazil) |
| 1992 | 1. Ban Basten (Acmilan/Italy)<br>3. Haessler (As Roma/Germany) | 2. Stoichkov (Bercelona/Bulgaria) |
| 1991 | 1. Lothar Mattaeus (Inter/Germany)<br>3. Gary Linekar (Tottenham / England) | 2.Papin (Marsille/France) |



RONALDO



SURKER



ZIDANE

### Zidane இன் முக்கிய பெறுபேறுகள்

பிறந்த திகதி :- June 23, 1972

1994:- முதன்முதல் France நாட்டுக்கு விளையாடினார். முதல் ஆட்டத்திலேயே இரு கோல்களைப் போட்டார்.

1996:- Eurropean Super Cup (Juventus)

1998 July 12 -World Cup - Final
இரு கோல்களை தலையால் (Head)
France World Champion

1998 July 12 - Sports
Personalty of the year Award

1998 December 21 -
1998 Europian Player of the year Award

1999:- Feb. 01 - FIFA 1998
World Player of the Year.


சீமை

Seemmai
CATERING & TAKE OUT SERVICES
Tel: 439-6815

Open 7 Days a Week 11:00 am - 11:00 pm

970 BRIMORTON DR.,
SCARBORO. ONT.
Orton Park & Brimorton Dr.
TEL: (416) 439-6815

உங்களிற்கு தாயக நினைவைக் கொண்டுவரும் தராதரம் கொண்ட உணவுவகைகள். எம்மிடம் ஒருமுறை விஜயம் செய்து உண்மையை அறிந்துகொள்ளுங்கள்.

*********************

அத்துடன் ஐயர், மண்டப வசதி, மணவறை, கமரா, மணப்பெண் அலங்காரம், வீடியோ, அனைத்திற்கும் ஒரேஇடம்.



Pillayar Traders

SRILANKAN . EAST & WEST INDIAN
GROCERIES & TEXTTILES
3630 LAWRENCE AV. E., SCARBORO
☎ : 438-7746


### விஷேச போட்டி இல. 82

G-15 ல் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளில் 10 ஐ தருக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஜ | டா | கோ | லா | யா | சி | லே | ம |
| மே | ன | சி | சு | பி | ம் | பி | யா |
| க் | க | க் | னு | ரா | பா | றே | ஸ் |
| கா | னா | மெ | வெ | ன் | வே | சி | ர |
| கை | லி | னா | நை | ம் | ள | பா | ரே |
| ங் | சி | சீ | ஜீ | து | ப | கி | எ |
| ல | ரு | பே | ரி | ன் | பா | ப் | ஜ |
| இ | ந் | தி | யா | ரி | ஜீ | ல் | அ |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலை கீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம்கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளை March 12, 99 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

#### # 81ன் விடைகள்

1. கனடா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, ஜமேக்கா, மலேசியா, நியூசிலாந்து, இங்கிலாந்து

பரிசு பெற்றோர்:

1) தனஞ்சேயன் P. Mississauga
2) ம. சரஸ்தி, Toronto

**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக்கக் கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது)

**விதிகள்:** ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம். பிள்ளையார் ரேடர்ஸ், விளம்பர ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.


YARLCAN
STEAM CLEANING





உங்கள்
சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்
Tel: 724-9085
Pager : 600 0335
Cell.: 721-9709



கலைமகள்
புத்தக நிலையம்

* சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
* தமிழ்ப் புத்தகங்கள்
* கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
* இலங்கை/இந்திய பத்திரிகைகள்
* குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
* CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
* கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

595 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 944-1818

3850 FINCH AVE. E. GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

2580 Sheppard Ave. #9,
Newin Centre Mall, Mississauga, Ont.
☎: (905) 306-0494

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

-சிவ பஞ்சலிங்கம்

## பகுதி (3)



கடந்த அத்தியாயத்தில் G(1) சாரதிப் பத்திரம் வைத்திரிப்பவர்களின் ஒழுங்கு விதிகளைப் பார்த்தோம். இம்முறை அதன் தொடர்ச்சியினை தொடர்வோம்.

2. வாகனம் ஓட்டப் பழக விரும்புபவருக்கு
   பக்கத்தில் இருந்து பயிற்சி கொடுப்பவர் தமது அனுமதி பத்திரம் பெற்று குறைந்தது நான்கு வருடங்களுக்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

இந்த சட்ட ஒழுங்கு விதியினை ஒருவர் மீறினால் என்ன நடக்கும்? அல்லது எப்படியான தண்டனை கிடைக்கும் என்பதற்கு ரொரன்ரோவில் இதனை மீறிய எனக்கு தெரிந்த எம் இனத்தவருக்கு நடந்த சம்பவம் ஒன்றினை இங்கு குறிப்பிட வேண்டிய நிர்பந்தம் உண்டு.

ஒரு பொலீஸ் உத்தியோகத்தர் வாகனம் ஒன்றினை இடை மறித்தார். சாரதியின் ஆசனத்தில் இருந்தவர் இதுவரை வீதிப் பரீட்சை சித்தியடையாது, பழகிக் கொண்டிருப்பவர். அருகில் இருந்து பயிற்சி வழங்குபவரின் சாரதி அனுமதி பத்திரம் பெற்று நான்கு வருடங்கள் பூர்த்தியாகவில்லை.

முடிவு---

பழகியவருக்கு தண்டனை பணம் ரிக்கற்! முன் ஆசனத்தில் இருந்து பயிற்சி கொடுத்தவருக்கு இன்னொரு தண்டனை பணம் ரிக்கற்! அதே நேரம் பயிற்சி வழங்கியவரின் சாரதி அனுமதி பத்திரம் சில காலங்கள் ரத்து செய்யப்பட்டது. இது இந்த சட்டப் பிரிவின் ஆக கூடுதலான தண்டனை.

